# பதவி பிரதேச சபை
# அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூலை 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதவி பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் 19 நிலையான சொத்து விடயங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 2,000,000 கிரயமான நூலகக் கட்டிடத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக அறவிடவேண்டிய கணக்காய்வுக் கட்டணம் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் வருமானத்தைக் கணிப்பிடுவதற்காக தயாரிக்கப்பட வேண்டிய பொழிப்பு வருமானப் பதிவேடு (பி.ச. 19) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் காணப்பட்ட ரூபா 486,839 தொகையான தொங்கல் கணக்கின் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 43,147,714 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,815 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 479,074 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 99 இன் பிரகாரம் சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் சபையின் தலைவரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 12 உறுதிச்சீட்டுக்களுக்காக ரூபா 220,036 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 180 இன் பிரகாரம் காசு அல்லது களஞ்சிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் அல்லது வருமானம் தொடர்பான கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 225 | 79 | 146 |
| (ii) | வாடகை | 1,365 | 802 | 563 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 370 | 487 | 117 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,077 | 1,506 | 571 |

### 2.3.2 வியாபார வரி

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 65 சதவீதம் அதாவது ரூபா 145,600 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

(அ) மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வாடகை வருமானத்தில் 41 சதவீதம் அதாவது ரூபா 563,000 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 02 கடைகளை வாடகை அடிப்படையில் வழங்காமையினால் சபைக்கு ஆகக் குறைந்தது ரூபா 87,600 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் அனுமதிப் பத்திரக் கட்டணம் உரியவாறு மதிப்பிடப்படாமையினால் மதிப்பீட்டு அளவினைவிட உள்ளபடியான வருவானம் ரூபா 487,000 தொகை அதாவது 32 சதவீதம் அதிகமாகக் கிடைத்திருந்தமை தெளிவாகியது.

### 2.3.5 ஏனைய வருமானம்

1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/07 ஆம் இலக்க உள்ளூராட்சி அமைச்சரின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் உபவிதி இல. 39 இன் பிரகாரம் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் பதாதைகளின் அளவின் அடிப்படையில் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,257,910 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 221,400 |

### 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 35,000 பெறுமதியான 02 இரட்டைப் படகுகள் 03 வருடங்களுக்கு அதிகமான காலம் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஒ) பிரிவின் பிரகாரம் விடயப்பொறுப்பு அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறவேண்டியிருந்தும் அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது விழாவிற்காக ரூபா 10,000 கூட்டுத்தொகையான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபையினால் அமுல்படுத்தப்பட்ட கூட்டுக்கிரயம் ரூபா 3,132,099 தொகையான 03 நிர்மாணங்களுக்கு உரிய கொடுப்பனவுகளைச் செய்யும் போது மாகாணப் பொறியியல் திணைக்களத்தின் நிலைமைக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்குனர்களுக்கிடையே பொதுப் போட்டியினை ஏற்படுத்தி நிறுவனத்திற்கு அதிக சாதகமுள்ள பொருட்கள் மற்றும் சேவைகைளைப் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 239,340 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட 07 சந்தர்ப்பங்களின் போது அந்தத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 6,918,062 கிரயமான 04 வேலைகள் ஆண்டின் இறுதி வரையிலும் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 203 மற்றும் 214 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் பின்னர் சபையின் சொத்துக்கள், களஞ்சியம் மற்றும் பொருட்பதிவேடு என்பன பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கப்பட்டு 06 மாத காலத்திற்குள் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 10,674 பெறுமதியான 05 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 11 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளளிக்கப்படாத சம்பளமாக ரூபா 785,981 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது பிரதேச சபையினால் சுற்றாடலை அழகுபடுத்தும் கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்